**மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி)(மு.கூ.பொ) அவர்களின் செயலாணைகள் முன்னிலை : திரு.வே.கோவிந்தராஜன்.,**

**செ.மு.ந.க.எண்.0039/ஊ.வ.2/2021.,** **நாள்: .02.2022.**

| | |
|---|---|
| பொருள்: | **பணியமைப்பு** - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் அலகு – மயிலாடுதுறை மாவட்டம் - பவானிசாகர் அடிப்படை பயிற்சி – உதவியாளர்/ இளநிலை உதவியாளர்களுக்கான 37 பணிநாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி (Day Scholar) – **11.02.2022** முதல் **25.03.2022** வரை சிறப்பு பயிற்சி – **திருவாரூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம்** மையம்(அணி:19) – (Non Residential Training) திருவாரூர் மாவட்டத்தில் பணிபுரிகின்ற பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்துதல் - அழைப்பாணை வரப்பெற்றது – 11.02.2022 முதல் 25.03.2022 முடிய அடிப்படை பயிற்சிக்கு பயிற்சியாளர்கள் அனுப்பி வைத்து ஆணையிடுதல் |
| பார்வை: | 1. மாவட்ட வருவாய் அலுவலர் / முதல்வர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர், அவர்களின் ந.க.எண்:540/அ5/2022., நாள்: 04.02.2022.<br>2. திரு.எஸ்.செந்தில், இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், செம்பனார்கோயில் என்பவரது ஒப்புதல் பத்திரம் நாள்:14.09.2021.<br>3. திருமதி.கே.சுபாஷினி, இளநிலை உதவியாளர், ஊராட்சி ஒன்றியம், செம்பனார்கோயில் என்பவரது ஒப்புதல் பத்திரம் நாள்:16.11.2021.<br>4. வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), கொள்ளிடம், ந.க.எண்:3694/2021/அ5., நாள்: 27.12.2021.<br>5. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் ந.க.எண்:<br>6. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை அவர்களின் ந.க.எண்:<br>7. இதர தொடர்புடைய ஆவணங்கள். |

*********

**ஆணை:**

பார்வை (1)-இல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்/ உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சி – உதவியாளர்/ இளநிலை உதவியாளர்களுக்கான 37 பணிநாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி (Day Scholar) – 11.02.2022 முதல் 25.03.2022 வரை சிறப்பு பயிற்சி Bharath College Of Education, Ammaiyappam, Thirunarur – இல் நடைபெற உள்ளதால், இப்பயிற்சிக்கு மயிலாடுதுறை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகின் சார்பில், பணிவரன்முறை செய்யப்பட்டவர்களில் முதுநிலைப்படி 15 நபர்களை பயிற்சிக்கு அனுப்பி வைத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை (2)-இன்படி, முதுநிலை பட்டியல் வரிசை எண்:1-இல் இடம்பெற்றுள்ள திரு.எஸ்.செந்தில் என்பவர் தனது தாயாரின் உடல் நிலை சரியில்லாமல் இருப்பதாலும், தனக்கு கோவிட் நோய் தொற்று பாதிப்படைந்து 1 மாத காலம் ஆகியதாலும் 2022 ஆம் ஆண்டு முழுவதுக்கும் பவானி சாகர் அடிப்படை பயிற்சியிலிருந்து விலக்கு அளித்திடுமாறு ஒப்புதல் பத்திரம் அளித்துள்ளார்.

பார்வை 3-இன்படி முதுநிலை பட்டியல் வரிசை எண்:02 இல் இடம்பெற்றுள்ள திருமதி.கே.சுபாஷினி என்பவர் 05.07.2021 முதல் மகப்பேறு விடுப்பில் இருப்பதாகவும், குழந்தையை அருகில் இருந்து பராமரிக்க

வேண்டிய காரணத்தினாலும் ஜீன்-2022 வரை தனக்கு பவானி சாகர் அடிப்படை பயிற்சியிலிருந்து விலக்கு அளித்திடுமாறு ஒப்புதல் பத்திரம் அளித்துள்ளார்.

மேற்காணும் 02 அலுவலர்களை தவிர்த்து பவானிசாகர் அரசு அலுவலர்களுக்கான 37 பணிநாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி (Day Scholar) –சிறப்பு பயிற்சி 19-வது அணிக்கு 11.02.2022 முதல் 25.03.2022 முடிய நடைபெற உள்ள 37 பணிநாட்கள் கொண்ட அடிப்படை பயிற்சிக்கு முதுநிலை வரிசை எண்:3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16 மற்றும் 17-இல் இடம்பெற்றுள்ள கீழ்காணும் 15 நபர்களை மயிலாடுதுறை மாவட்ட ஊரக வளர்ச்சி அலகிலிருந்து அனுப்பிட இதன்மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பதவி (திருவாளர்கள்) | பணிபுரியும் அலுவலகம் |
|---|---|---|
| 1. | ஆர்.ரேவதி,<br>இளநிலை உதவியாளர் | உதவி இயக்குநர் (ஊ),<br>மயிலாடுதுறை. |
| 2. | என்.பூராசாமி,<br>ஊ.ந.அலுவலர் நிலை-2 | ஊராட்சி ஒன்றியம்,<br>கொள்ளிடம். |
| 3. | ஆர்.கார்த்திக்,<br>இளநிலை உதவியாளர் | மாவட்ட ஆட்சியரகம் (வ),<br>மயிலாடுதுறை. |
| 4. | ஜெ.கிருஷ்ணமூர்த்தி,<br>இளநிலை உதவியாளர் | ஊராட்சி ஒன்றியம்,<br>கொள்ளிடம். |
| 5. | சி.ஜீவானந்தம்,<br>இளநிலை உதவியாளர். | உதவி இயக்குநர் (த),<br>மயிலாடுதுறை |
| 6. | கே.ஜெயசங்கர்,<br>இளநிலை உதவியாளர் | ஊராட்சி ஒன்றியம்,<br>சீர்காழி. |
| 7. | ஜி.இளையகுமார்,<br>இளநிலை உதவியாளர் | இணை இயக்குநர்<br>(ஊ.வ (ம) ஊ.து) அலுவலகம்,<br>மயிலாடுதுறை. |
| 8. | ஆர்.கவிதா,<br>இளநிலை உதவியாளர் | இணை இயக்குநர்<br>(ஊ.வ (ம) ஊ.து) அலுவலகம்,<br>மயிலாடுதுறை. |
| 9. | அ. குருபிரசாத்,<br>இளநிலை உதவியாளர் | மாவட்ட ஆட்சியரகம்(வ)<br>மயிலாடுதுறை. |
| 10. | ஆர்.காஞ்சனாதேவி,<br>இளநிலை உதவியாளர் | உதவி இயக்குநர் (ஊ),<br>மயிலாடுதுறை. |
| 11. | சு.கார்த்திகேயன்,<br>காசாளர் | ஊராட்சி ஒன்றியம்,<br>சீர்காழி. |
| 12. | எஸ்.செல்வகுமார்,<br>இளநிலை உதவியாளர் | உதவி செயற்பொறியாளர் (ஊ.வ)<br>அலுவலகம், மயிலாடுதுறை உபகோட்டம்,<br>மயிலாடுதுறை. |
| 13. | கே.பி.சத்யபாலா,<br>இளநிலை உதவியாளர் | இணை இயக்குநர் (ஊ.வ.(ம)ஊ.து),<br>மயிலாடுதுறை. |
| 14. | செ.பாவேந்தன்,<br>இளநிலை உதவியாளர் | இணை இயக்குநர் (ஊ.வ.(ம)ஊ.து),<br>மயிலாடுதுறை. |
| 15. | இரா.கவாஸ்கர்,<br>ஊ.ந.அ. நிலை-2 | ஊராட்சி ஒன்றியம்,<br>கொள்ளிடம். |

அடிப்படை பயிற்சிக்கான பயிற்சி கட்டணம் ரூ.8,105/-ஐ (WWW.cstibhavanaisagar.in-> Online Admission Mozilla firefox) என்ற இணைய வழியாக 07.02.200 அன்று காலை 9 மணி முதல் 10.02.2022 மாலை 5 மணிக்குள் பயிற்சியாளர்கள் தங்களது விபரங்களை பதிவேற்றம் செய்து, பயிற்சி கட்டணத்தை இணைய வழியாக செலுத்த வேண்டும். மேலும், விண்ணப்பம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள், பதிவிறக்கம் செய்வது மற்றும் கையொப்பம் பெறுவது தொடர்பாக கொடுக்கப்படும் விரிவான வழிமுறைகளை இணையதளத்தில் குறிப்பிட்டுள்ளவாறு பின்பற்றுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் பயிற்சியாளர்கள் பயிற்சிக்கு செல்லும்போது கீழே குறிப்பிட்டுள்ள ஆவணங்களைக் கொண்டு செல்ல வேண்டும்.

1. ஒப்பந்தப்பத்திரம். (Surety Bond ரூ.70,000/-க்கு குறையாமல்)
2. ஆளறி அடையாள அட்டை (Identity Card)
3. பணிவரன்முறை உத்தரவு நகல் (Regularisation Order Copy)
4. பயிற்சியாளர்களின் புகைப்படம் ஒட்டி அலுவலக தலைவர் சான்றொப்பம் இட்டு பயிற்சிக்கு விடுவிக்கப்பட்ட உத்தரவு (Relieving Order)
5. ஆளறி சான்றுடன் கூடிய பணிவிடுப்பானை.
6. உணவக முன்பணம் ரூ.7,400/, பஞ்சாயத்து நிதி ரூ.120/-, பயிற்சி கையேடு ரூ.585/- ஆக மொத்தம் ரூ.8,105/- பயிற்சி கட்டணம்.

பயிற்சியில் சேருவதற்கான விளக்கக்குறிப்புகள் நகல் இத்துடன் அனுப்பப்படுகிறது. விளக்கக்குறிப்பில் குறிப்பிட்டுள்ள பொருட்களுடன் கட்டாயம் பயிற்சி நிலையத்திற்கு செல்ல தனியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பயிற்சிக்கு 11.02.2022 அன்று முற்பகல் 9.00 மணிக்குள் திருவாரூர் சிறப்பு பயிற்சி மையத்தில் சேரும் வண்ணம் தனியர்களை பணியிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். 11.02.2022 அன்று முற்பகல் 9.00 மணிக்கு பின்னர் செல்லும் பயிற்சியாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும் இணைப்பில் கண்டுள்ள ஒப்பந்த பத்திரத்தினை பூர்த்தி செய்து ஒரு பிரதியை பயிற்சியாளர் வசம் கொடுத்தனுப்பி பயிற்சி நிலையத்தில் ஒப்படைத்திட தொடர்புடைய அலுவலக தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு:** கடித நகல் மற்றும் விளக்கக்குறிப்புகள்.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி)
மயிலாடுதுறை.

7.2.2022

பெறுநர் : தொடர்புடையவர்கள் – உரிய வழியாக.

நகல்: இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை-15
நகல்: மாவட்ட வருவாய் அலுவலர் / முதல்வர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானி சாகர், ஈரோடு.
நகல்: இணை இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, மயிலாடுதுறை.
நகல்: இணை இயக்குநர் / திட்ட இயக்குநர், மகளிர்திட்டம், மயிலாடுதுறை.
நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)/(தணிக்கை), மயிலாடுதுறை.
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ)/ (கிஊ), மயிலாடுதுறை மாவட்டம்.
நகல்: ஊவ.2 மற்றும் ஊ.வ.4 பிரிவு இருப்பு கோப்பிற்கு.